<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>
<u>நகர்மன்றக்கூட்டம்</u>
<u>நாள். 28.3.2018 புதன்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>

---

<u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 28.3.2018</u>

<u>பொருள்: 1</u>

தமிழ்நாடு அரசிதழ் எண்.33, நாள்.25.1.2018–ல் பகுதி–V–ல் (Part-V) 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட. பிரிவு 83 செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7234/2014/ஆர்.1, நாள்.15.3.2018–ம் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 1394/2017/அ1)

**தீர்மானம் எண். 1** **நாள் : 28.3.2018**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 2</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு–21, திருவள்ளுவர் நகர் மெயின் தெருவில் கழிவு நீர் கால்வாய் இல்லாததால் அத்தெரு மக்கள் புதைக்குழி (உறிஞ்சு குழி) போடப்பட்டுள்ளது. தற்போது உறிஞ்சுக்குழிகள் நிறைந்து கழிவு நீர் சாலையின் மேற்பரப்பில் செல்கிறது. எனவே, கழிவுநீரை கடத்துவதற்கு புதியதாக கால்வாய் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 9.85 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு:–</u>
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 2** **நாள் : 28.3.2018**
**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள்–3</u>
இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை மாதிரிகளை எடுத்து ஆய்வகத்தில் ஆய்வு செய்து அறிக்கைப் பெறப்பட வேண்டி உள்ளதால் குப்பை மாதிரிகளை ஆய்வு செய்ய ஆய்வக செலவுத் தொகை உத்தேச மதிப்பு ரூ.16,500–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.10/2017/எச்1)

**தீர்மானம் எண். 3** **நாள் : 28.3.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்–4**

திருமதி.தமிழ்ச்செல்வி என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.No.23845 of 2017ற்கு வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் ரூ.7500/– யை திரு.கே.மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.693/17/அ1)

**தீர்மானம் எண். 4** **நாள் : 28.3.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்–5**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் சீராக நடைபெற பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றவும் விரிவாக்க பகுதிகளுக்கு புதிய குடிநீர் குழாய் பதிக்கவும், ரூ. 234.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ. 234.00 இலட்சத்தையும் மான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:–**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட பணிக்கான திட்டமதிப்பீட்டுத்தொகை ரூ. 234.00 இலட்சத்தை முழு மான்யமாக பெறலாம்.

**தீர்மானம் எண் : 5** **நாள். 28.3.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–6**

இந்நகராட்சிப்பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு 33, நாள், 15.1.2018–ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7234/2014/ஆர்.1, நாள். 15.3.2018–ன் படியும் சொத்துவரி விதிப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 6** **நாள் : 28.3.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

மன்றப்பொருள்–7

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 100 எச்.பி.மோட்டார்களை கொண்ட மோட்டார் அறை உள்ளது. எனவே, 100 எச்.டி. மோட்டார் அறையை பாதுகாக்கவும், மோட்டாரை இயக்கவும் இரவுக்கும் பகலுக்கும் சேர்ந்து 4 பேர்களை கொண்டு காவல் பணி மேற்கொள்ளவும், வைகை பேரணையில் புதியதாக போடப்பட்டுள்ள மூன்று உறிஞ்சு கிணறுகளை இயக்க 10 எச்.பி. மோட்டார் 3 எண்ணம் கொண்ட ஒரு மோட்டார் அறை உள்ளது. இம்மோட்டார்களை இயக்கவும், பாதுகாக்கவும் 3 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும், மேலும், உசிலம்பட்டி நகராட்சி பேருந்து வளாகத்திற்குள் உள்ள 4 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இவ்வளாகத்தை பாதுகாக்கும் பொருட்டு இரண்டு காவலர்களும் ஆக மொத்தம் 9 காவலர் பணியாளர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 17086/2017/இ2, நாள். 8.6.2017–ன்படி காவலருக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ. 277/–யை நிர்ணயம் செய்யப்பட்டு 1.5.2018 முதல் 30.10.2018 வரை பணியாட்களை சப்ளை செய்ய ரூ. 4.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.குடிநீர் பணி என்பதால் மேற்கண்ட பணியை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 7** **நாள் : 28.3.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி